தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 158/2024 | சாட்சியம் | : | **PW1** |
| **Name** | : | திரு.தனபாலன் | | | |
| **Date** | : | **03.08.2026** | | | |
| **Time** | : | **11.59 a.m to 12.16 p.m** | | | |

தொ.த.சா.1.திரு.தனபாலன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்யபட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

எனக்கு தற்போது 63 வயது ஆகிறது. இப்போது எந்த வேலையும் பார்க்கவில்லை. ITI Fitter படித்துள்ளேன். ID 530/2000 வழக்கில் 50 சதவீகித பின் சம்பளத்துடன் மீண்டும் பணி வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். தீர்ப்பிற்கு பிறகு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எனக்கு வேலை வழங்க முன் வந்து நான் வேலையில் சேரவில்லை என்றால் வேலையில் சேரச்சொல்லி தகவல் எதுவும் வரவில்லை. மீண்டும் வேலையில் சேர்த்துகொள்ள கேட்டு மனு மூலம் கேட்டேனா என்றால் இல்லை வழக்கறிஞர் மூலம் கேட்டேன். தீர்ப்பிற்கு பிறகு எதிர்மனுதாரர் உடன் சமரச பேச்சு வார்த்தை எதுவும் நடத்தினேனா என்றால் இல்லை. தீர்ப்பிற்கு பிறகு நடந்த பேச்சு வார்த்தையில் நான் மீண்டும் வேலையில் சேர ஆர்வம் காட்டாமல் நிர்வாகத்திடமிருந்து பணம் பெறுவதில் தான் குறிக்கோளாக இருந்தேன் என்றால் தவறு நிர்வாக தரப்பில் எந்த பேச்சு வார்த்தைக்கும்

அவர்கள் வரவில்லை. என் வழக்கறிஞர் என் சார்பாக மீண்டும் பணியும் இரத பண பயன்களும் வழங்க வேண்டும் என கேட்டு நிர்வாகத்திடம் பேச்சு வார்த்தை நடந்ததினார் நிர்வாகம் மனுதாரரின் கோரிக்கைக்கு உடன்படவில்லை. 2010 ல் தீர்ப்பு வந்திருக்கும் போது கால தாமதமாக இந்த மனுவை 2024 ல் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் என்ன என்றால் நிர்வாக தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து இருந்தார்கள். எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் வேறு நிறுவனத்தில் வேலை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. என்னை பணியில் இருந்து விடுவித்த போது நிர்வாகத்திடமிருந்து சான்றிதழ் எதுவும் பெற்றேனா என்றால் அதற்கு முன்பே நன்னடத்தை சான்றிதழ் வாங்கினேன்.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation, read over to, interpreted to the witness and acknowledged by her/him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:03.08.2026.